மாலை முரசு

பக்கங்கள் 14+ 03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி 27 வெள்ளிக்கிழமை 11.07.2024 | அதிர்வு 342

## 13 ஆயிரத்து 392 பேருக்கு 9 பாடங்களிலும் ஏ சித்தி

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வியாழக்கிழமை நள்ளிரவு வெளியிடப்பட்டன. அதற்கமைய இம்முறை 13 ஆயிரத்து 392 பேர் 9 பாடங்களிலும் ஏ சித்தி 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# இனவழிப்புக்கு சான்றாதாரங்கள் செம்மணியில்!

### சுமந்திரன், சி.வி.கே. தெரிவிப்பு
### ஜனாதிபதி அநுரவுக்குக் கடிதம்

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுகள் மற்றும் வடக்கு, கிழக்குத் தமிழர் பகுதி களில் கண்டுபிடிக்கப்பட்ட வேறும் பல கூட்டப்புதைகுழிகளையும் சேர்த்துக் கருத்திலெடுக்கும் போது, இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களையும், இனவழிப்பு முயற்சிகளையும் வெளிப்படுத்தும் 02▶



## வேம்படி மகளிர் பாடசாலையில் 120 மாணவர்களுக்கு 9 ஏ சித்தி

வெளியாகியுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் 120 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

36 மாணவர்கள் 8 பாடங்களிலும், 25 மாணவர்கள் 7 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றிய 265 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

| J/Vembadi Girls' High School | |
|---|---|
| G.C.E (O/L) 2024(2025) Best Performance | |
| 9A | 120 |
| 8A | 36 |
| 7A | 25 |
| Total No. Of Candidates = 265 | |
| PASS PERCENTAGE 100% | |

## இனவழிப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவான ஆதாரங்களாக அவை வெளிப்படுகின்றன என்று இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வுக்கு இன்று கடிதம் மூலம் அறிவித்தி ருக்கின்றனர் இலங்கைத் தமிழ்ரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞான மும், பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும்.

'செம்மணி மனிதப் புதைகுழி விசார ணையில் உண்மை கண்டறிதல், சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் நீதியின் அவசியம்' – என்ற தலைப்பில் அனுப்பப் பட்ட அந்தக் கடிதத்தின் முழு விவரங்களும் வருமாறு:–

"தற்போது நடைபெற்று வரும் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாய் வுகள் தொடர்பில் எம் ஆழ்ந்த கரிச னையை வெளிக்காட்ட இலங்கைத் தமிழ்ரசுக் கட்சியின் சார்பில் இக் கடிதத்தை எழுதுகின்றோம். உண்மையை வெளிக்கொணரவும், தடயவியல் விசார ணைகளில் சர்வதேச ரீதியில் தரநிலை களை பின்பற்றுவதை உறுதி செய்யவும், குற்றவாளிகளை நீதிக்கு முன்னிறுத்தவும் அவசரமானதும், தீர்மானமானதுமான நடவடிக்கைகளை எடுக்குமாறு இக் கடிதத்தினூடு கேட்டுக்கொள்ள விழை கிறோம்.

இலங்கையில் 1990 களின் நடுப்பகுதி வரை தொடர்ந்த வலுக்கட்டாயமான காணாமற் போக்கல்கள் மற்றும் நீதிக்குப் புறம்பான கொலைகளின் நீண்ட, இன்றும் தீர்க்கப்படாத வரலாற்றையே செம்மணி பிரதிபலிக்கின்றது. 1998இல், தமிழ்ப்பள்ளி மாணவி கிருசாந்தி குமார சாமி மற்றும் அவருடைய குடும்பத்தினரை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்ததாகத் தீர்க்கப்பட்ட லான்ஸ் கார்ப் பரல் சோமரத்ன ராஜபக்ஷ, தனது தண் டனை விசாரணையின் போது, குமாரசாமி குடும்பம் புதைக்கப்பட்ட இடத்தில் 300 – 400 தமிழ் பொது மக்கள் புதைக்கப் பட்டிருப்பதை நீதிமன்றில் வெளிப் படுத்தியிருந்தார். இந்தச் சாட்சியின் அடிப்படையில் 1999இல் அகழ்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்ட போது, 15 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதில் இரண்டு எலும்புக்கூடுகள் 1996இல் காணாமலாக்கப்பட்டவர்களது என உறுதி செய்யப்பட்டது. இவர்கள் உடல் ரீதியாகத் தாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டதை தடய ஆதாரங்கள் உறுதி செய்திருந்த போதும், வழக்குகள் நடுநிலையிலேயே நின்றுவிட்டன. இதுவரை நீதியும் வழங்கப்படவில்லை.

2025 ஆரம்பத்தில், யாழ்ப்பாணத் தின் வட பகுதியில் அமைந்த செம்மணி – அரியாலை – சித்துப்பாத்தி இந்து மயா னத்தை மறுசீரமைக்கும் பணிகளின் போது மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக் கப்பட்டன. இதையடுத்து யாழ். நீதிவான் நீதிமன்றம் அந்த இடத்தை அதிகாரபூர் வமாக ஒரு மனித புதைகுழியாக அறி வித்து, நீதித்துறையின் மேற்பார்வையில் அகழ்வுகளை மேற்கொள்ள உத்தரவிட் டது. இன்றுவரை, இரண்டு கட்டங்களாக நடந்து வரும் அகழ்வுப் பணிகளில் குழந் தைகளும் உட்பட சுமார் 65 எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மனித எச்சங்களோடு பள்ளிப்பை, பொம்மை, வளையல்கள், காலணிகள் மற்றும் உடைத் துணுக்குகள் போன்ற தனி உடைமைகளும் சேர்த்தே மீட்கப்பட் டிருக்கின்றன. அனைத்து எலும்புக்கூடு களும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தடய ஆய்வுகளுக்காக பேணப்பட்டு வருகின்றன.

இந்த அகழ்வுகள், வடக்கு, கிழக்கு தமிழர் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட வேறும் பல கூட்டப் புதைகுழிகளையும் சேர்த்துக் கருத்தில் எடுக்கும் போது, இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களையும், இனவழிப்பு முயற்சிகளையும் வெளிப் படுத்தும் தெளிவான ஆதாரங்களாகும். (இலங்கை அரசானது தனது) இந்தத் தமிழர் விரோத கொடும் வரலாற்றை முழுமையாக ஏற்றுக்கொள்வது அவசி யம்.

மாறும் நீதி செயல்முறையின் அடிப் படையாக உண்மைக்கான தேடல் அமைய வேண்டும். 2009இல் போர் முடிவடைந்த பிறகு பதினாறாண்டுகளுக்கு மேல் கடந்தும் நூற்றுக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் இன்னும் பதில்களைத் தேடியலைகின்றனர். இந்த குடும்பங்கள் தங்கள் காணாமல்போன உறவுகளின் நிலை குறித்து பதில்மறுக்க முடியாத கேள்விகளை எழுப்புகின்றனர். அடுத் தடுத்த அரசாங்கங்களின் தொடர் மௌனம் வெறும் அரசியல் தோல்வி மட்டுமல்ல, தீவிரமான தார்மீகத் தவறும் கூட. உண்மையை அறியாது கடக்கும் ஒவ்வொரு ஆண்டும் போரின் வடுக்களில் இருந்து நாடு குணமடைவதையும், தொக்கு நிற்கும் கேள்விகளின் முடிவை யும்தள்ளிப்போட்டுக்கொண்டிருக்கின்றது.

1999இல் அகழப்பட்ட பதினைந்து உடல் எச்சங்களும், இன்று அகழப்பட்டுக் கொண்டிருக்கும் எலும்புக்கூடுகளும் ஒரே குற்றவியல் சூழலுடன் தொடர்புபட் டவை. இருப்பினும், அன்றைய அகழ் தலைக் குறித்த கொழும்பு நீதிவான் நீதி மன்றில் இருக்கும் முடிவுறா வழக்கானது இன்றைய விசாரணைகளுடன் முறை யாக இணைக்கப்படவில்லை. இவை இப்போது ஒரே குற்றவியல் நடவடிக்கை யின் பகுதிகளாகக் கருதப்பட வேண்டும். இரு விசாரணைகளையும் ஒருங்கிணைத் தால்தான் தக்க பொறுப்புக் கூறல் ஏற்பட முடியும்.

இலங்கையின் குறைந்த உள்நாட்டு தடய ஆய்வுத் திறனும், முன்னைய புதைகுழி விசாரணைகளை நீதித்துறை வெளிப்படைத்தன்மையின்றிக் கையாண்ட வரலாறுகளும் நம்பகமான சர்வதேச மேற்பார்வையையும், தெளிவான ஒளிவு மறைவில்லாத விசாரணை நடைமுறை களையும் அவசியமாக்குகின்றன. காவல் வரிசை மிகச்சரியாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சுயாதீன தடய ஆய்வு நிபுணர்கள் அகழ்தல், அடையாளம் காணல் மற்றும் பகுப்பாய்வு என்பவற்றை மேற்பார்வையிட வேண்டும். இடைக்கால மற்றும் இறுதி அறிக்கைகள் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், சிவில் சமூகம், சர்வதேச அவதானிப்பாளர் கள் மற்றும் பொதுமக்களுக்கு வாசனைக்காக வெளிப்படையாக பிரசுரிக் கப்பட வேண்டும்.

1999இல் அகழப்பட்ட பதினைந்து உடல்கள் பகுப்பாய்வுக்காக க்ளாஸ்கோ பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டன எனத் தெரியவந்துள்ளது. இதுவரை, அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங் கள் எவையும் அந்த பூதவுடல்களை தாய்நாட்டுக்குத் திருப்பியெடுக்க, பாதிக் கப்பட்டவர்களை அடையாளம் காண, அல்லது முறையான இறுதிச் சடங்குகளை ஏற்படுத்த எந்தவொரு பொருத்தமான நடவடிக்கையும் எடுத்ததில்லை. அந்த உடல்கள் அவசரமாக இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட வேண்டும். இவற்றை சர்வதேச கண்காணிப்பு நடைமுறைகளை இயக்கி, இன்று செய்யப்படும் செம்மணி அகழ்வுகளோடு இணைத்து விசாரணை செய்தால் மட்டுமே ஓர் ஒருங்கிணைந்த, தெளிவான உண்மைத் தேடல் செயல் முறையொன்று தோன்றலாம்.

செம்மணி நிலம் மீண்டும் பேசுகின் றது. குழந்தைகள் உட்பட நாற்பது எலும்புக்கூடுகள், அவர்களின் தனிப்பட்ட பொருள்களுடன் வெளிப்பட்டுள்ளன. இது அவர்கள் படைத்துறை சாராத சிவில் மக்கள் என்பதையும், நிரபராதிகள் என்பதையும் வேதனையுடன் உறுதிப் படுத்துகின்றது. இப்படிப்பட்டவர்கள் புதைந்திருக்க, குற்றவாளிகளோ நாட்டில் சுதந்திரமாக உலவுகின்றனர். உறுதியான சட்ட நடவடிக்கை இல்லாமல் (அரசின்) நல்லிணக்கத் தோரணைப் பேச்சுக்கள் வெறுமையாகவே ஒலிக்கின்றன.

எனவே, பின்வரும் நடவடிக்கைகளை தாமதமின்றி முன்னெடுக்குமாறு ஜனாதி பதியாக உங்களை மரியாதையுடனும், உறுதியுடனும் நாம் கேட்டுக்கொள் கிறோம்:–

1. 1999 மற்றும் 2025 புதைகுழி அகழ்வுகளையும், அவை தொடர்பான விசாரணைகளையும், சட்ட வழக்குக ளையும், கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றங்களின் கீழ், ஒரே நீதிமன்ற மற்றும் தடய ஆய்வு விசாரணை யாக ஒருங்கிணைக்க வேண்டும்.

2. விசாரணையின் அனைத்து நிலை களையும் மேற்பார்வை செய்ய, சுயா தீனமான, சர்வதேச தடய ஆய்வு நிபுணர் களை ஈடுபடுத்தி, தடய ஆய்வின் உண் மைத் தன்மையையும், பொது மக்களின் நம்பிக்கையையும் உறுதி செய்ய வேண்டும்.

3. இடைக்கால மற்றும் இறுதி தடய ஆய்வு அறிக்கைகள், பரம்பரையலகு விவரங்கள் மற்றும் ஆள் அடையாளம் காணல் முடிவுகள் அனைத்தையும் பொதுமக்களுக்கு வெளியிட்டு, பாதிக்கப் பட்டவர்களின் குடும்பங்கள், சிவில் சமூகம் மற்றும் சர்வதேச அவதானிப்பா ளர்கள் ஆகியோருக்கு அவற்றை இலகுவாகப் பெற்றுக்கொள்ள ஆவன செய்ய வேண்டும்.

4. தற்போது கிளாஸ்கோவில் இருப் பதாக நம்பப்படும் 1999இல் தோண் டியெடுக்கப்பட்ட சடலங்களை உடனடியாக மீளப்பெற்று, அவற்றை மேற்சொன்ன நடைமுறைகளின் கீழ் ஒரே விசார ணையின் கீழ் இணைத்து ஆய்வு செய்து, கூடிய விரைவில் அவற்றை குடும்பங்களிடம் சேர்க்க உரிய செய்ய வேண்டும்.

(03ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் மின் கம்பத்தில் ஏறி போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்

கொழும்பு - கோட்டை ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்துக்கு முன்பாக உள்ள மின் கம்பத்தில் ஏறி இளைஞர் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இந்த நபர் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் மின் கம்பத்தில் ஏறிப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

தீயணைப்புப் படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் இணைந்து மின் கம்பத்தில் ஏறிப் போராட்டத்தில் ஈடுபட்ட நபரை மீட்டு கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். இது தொடர்பான விசாரணைகளை கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி இளைஞர் எதற்காக இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டார் என்ற காரணத்தைப் பொலிஸார் தெரிவிக்கவில்லை.



# வவு/ இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் 34 பேர் 9 ஏ சித்தி

(கி.வசந்தன்)

வெளிவந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் தமிழ் மொழி மூலம் 23 மாணவர்களும், ஆங்கில மொழி மூலம் 11 மாணவர்களுமாக 34 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

இதேவேளை, 17 மாணவர்கள் தமிழ் மொழி மூலமாகவும், 3 மாணவர்கள் ஆங்கில மொழி மூலமாகவும் 8 பாடங்களில் ஏ தர சித்தியைப் பெற்றுள்ளனர்.



## இனவழிப்புக்கு...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

5. தற்போதைய அகழ்வுகள் சர்வதேச நியமங்கள் படி முழுமையடைய நிதி மற்றும் இதர வளங்களை அதிகரிக்க வேண்டும். நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இன்னும் காணாமல்போன தம் உறவுகளைத் தேடி வருகின்றனர். உண்மை மற்றும் பொறுப்புக் கூறல் இல்லாத நல்லிணக்கம் போலித் தோற்றம் மட்டுமே. இந்தக் கொடூரமான குற்றங்களை இழைத்தவர்களுக்கு எதிராக குற்ற வழக்குத் தொடருதல் நடவடிக்கைகளை மேற்கொள்வது தேசிய நல்லிணக்கத்துக்கு அத்தியாவசியமானதாகும்.

இந்த நடவடிக்கைகள் இலங்கையின் தார்மீக மற்றும் சட்டப் பொறுப்புகளை நிறைவேற்றவும், உண்மை மற்றும் நீதிக்கான நம்பகமான பாதையை உருவாக்கவும் அவசியமானவை.

இந்த நடவடிக்கைகளை எளிதாக்குவதிலும், அவற்றின் காலமுறையான செயலாக்கத்தை உறுதி செய்வதிலும், எங்கள் ஆதரவைத் தர நாம் என்றும் தயாராகவே உள்ளோம்." - என்றுள்ளது.

## 13 ஆயிரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைப் பெற்றுள்ளனர். அதேவேளை சுமார் 2 சதவீதமானோர் எந்தவொரு பாடத்திலும் சித்தி பெறவில்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பரீட்சை திணைக்களத்தில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கடந்த மார்ச் 17ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை 3 ஆயிரத்து 664 பரீட்சை மத்திய நிலையங்களில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைகள் இடம்பெற்றன.

3 இலட்சத்து 98 ஆயிரத்து 182 பரீட்சாத்திகள் பாடசாலை ஊடாகவும், 75 ஆயிரத்து 965 பரீட்சாத்திகள் தனிப்பட்ட ரீதியிலும் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தனர். விண்ணப்பித்திருந்த 4 இலட்சத்து 74 ஆயிரத்து 147 பரீட்சாத்திகளில் 3 இலட்சத்து 75 ஆயிரத்து 244 பேர் பாடசாலை ஊடாகவும், 49 ஆயிரத்து 908 பேர் தனிப்பட்ட ரீதியிலும் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். அதற்கமைய ஒட்டுமொத்தமாக 425 152 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இவர்களில் 2 இலட்சத்து 37 ஆயிரத்து 26 பரீட்சாத்திகள் உயர்தரக் கல்வியைத் தொடர்வதற்குத் தகுதி பெற்றுள்ளனர். இது 73.45 சதவீதமாகும். 13 ஆயிரத்து 392 பேர் 9 பாடங்களிலும் ஏ சித்தியைப் பெற்றுள்ளனர். இது 4.15 சதவீதமாகும்.

மேல் மாகாணத்தில் 74 சதவீதமானோரும், மத்திய மாகாணத்தில் 73 சதவீதமானோரும், தென் மாகாணத்தில் 75 சதவீதமானோரும், வடக்கு மாகாணத்தில் 69 சதவீதமானோரும், கிழக்கு மாகாணத்தில் 74 சதவீதமானோரும், வடமேல் மாகாணத்தில் 71 சதவீதமானோரும், வடமத்திய மாகாணத்தில் 70 சதவீதமானோரும், ஊவா மாகாணத்தில் 73 சதவீதமானோரும் மற்றும் சப்ரகமுவ மாகாணத்தில் 73 சதவீதமானோரும் உயர்தரக் கல்வியைத் தொடர்வதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

ஆங்கிலப் பாடத்தில் 73 சதவீதமானோரும், விஞ்ஞான பாடத்தில் 72 சதவீதமானோரும், கணித பாடத்தில் 69 சதவீதமானோரும் சித்தியடைந்துள்ளனர்.

எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை பெறுபேறுகள் மீள் பரிசீலனைக்காக விண்ணப்பிக்க முடியும். 2 சதவீதமானோர் எந்தவொரு பாடத்திலும் சித்தி பெறவில்லை. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெறுபேறுகளில் பாரியளவில் முன்னேற்றம் இல்லை.

இவ்வாண்டுக்கான ஜி.சீ.ஏ. உயர்தரப் பரீட்சைகள் நவம்பர் 10ஆம் திகதி முதல் டிசம்பர் 5ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. அதேவேளை, இந்த வருடத்துக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைகளை 2026 ஆம் ஆண்டு பெப்ரவரியில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் இருந்து பரீட்சைகளை உரிய மாதங்களில் நடத்துவதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றோம்." - என்றார்.

# இரண்டு இலங்கையர்கள் பாகிஸ்தானில் கைதாகினர்!

பாகிஸ்தானில் இரண்டு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த தகவலை, அந்த நாட்டின் புலனாய்வுத்துறையினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

பைசலாபாத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒரு மோசடி அழைப்பு மையத்தில் பணியாற்றிய நிலையிலேயே இந்த இரண்டு இலங்கையர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது மொத்தமாக 149 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 78 பாகிஸ்தானியர்கள், 48 சீனர்கள், 8 நைஜீரியர்கள், 4 பிலிப்பைன்ஸ் நாட்டவர்கள், ஆறு பங்களாதேஸ் நாட்டவர்கள், இரண்டு மியான்மர் நாட்டவர்கள், ஒரு சிம்பாப்வே நாட்டவர் மற்றும் இரு இலங்கையர்கள் அடங்குகின்றனர்.

இந்த மோசடி அழைப்பு மையத்தில், அதிக வருமானம் தரும் முதலீட்டு வாய்ப்புகள் என்றுக் கூறி, பெரும் தொகை மோசடி செய்யப்படடுள்ளது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.




# ராஜித உடன் கைது செய்க!

**கொழும்பு நீதிமன்றம் அதிரடி உத்தரவு**



கிரிந்த மீன்பிடி துறை முகத்தில் மணல் அகழ்வும் திட்டத்தை கொரிய நிறுவனத் திற்கு ஒப்படைத்து அரசுக்கு 2.63 மில்லியன் ரூபாவுக் கும் அதிகமாக நட்டத்தை ஏற்படுத்தினார் என்று கூறப்படும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனு வெல இன்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு இன்று கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனுவெல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கைகளைக் கருத்தில்கொண்ட நீதிவான், ராஜித சேனாரத்னவைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்டார்.

இது தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் விசா ரணை ஆணைக்குழு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நித்திரையில் இருந்தவர் மீது அதிகாலை துப்பாக்கிச்சூடு!

**பாணந்துறையில் சம்பவம்**



பாணந்துறை, ஹிரண பொலிஸ் பிரிவின் மாலமுல்ல பகுதியில் உள்ள ஒரு வீட்டின் அறையில் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை தூங்கிக் கொண்டிருந்த ஒருவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இனந்தெரியாத நபர் ஒருவர் வீட்டின் ஜன்னலை உடைத்து துப்பாக்கியால் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த நபர் மாலமுல்ல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

மேற்படி நபர் சிகிச்சைக்காகப் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் மற்றும் சந்தேகநபர்கள் பற்றிய தகவல்கள் இன்னும் கண்டறியப்படாத நிலையில் சந்தேக நபர்களைக் கைது செய்ய 3 பொலிஸ் குழுக்கள் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், குடு சலிந்து மற்றும் நிலங்க இடையேயான மோதலில் குடு சலிந்துவின் தரப்பைச் சேர்ந்த ஒருவரை குறிவைத்து இந்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.




# இன்று காலை கதிர்காமத்தில் தீர்த்தம்!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று சிறப்பு மிக்க கதிர்காம கந்தன் திருத்தல தீர்தோற்சவம் இன்று (11) வெள்ளிக்கிழமை காலை மாணிக்க கங்கையில் இடம்பெற்றது.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இனவழிப்புக்கு சான்றாதாரம்

தோண்டத் தோண்ட மனித எலும்புக் கூடுகளாக - அதுவும், சிறுவர் சிறுமியரின் எலும்புக்கூடுகளாக பல - வெளிப்படும் நிலையில் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக மாறி வருகிறது.

இந்தச் சமயத்தில் தமிழர்களின் முக்கிய கட்சியான இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானமும், செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும் ஒப்பமிட்டு இலங்கையின் அதிகாரத் தலைவரான ஜனாதிபதி அநுரகுமாரதிஸநாயக்காவுக்கு அனுப்பி உள்ள கடிதம் மிகக் கவனிப்புக்குரியதாக உள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழிகள் மட்டுமல்ல, வடக்கின் தமிழ்ப் பகுதிகளில் உள்ள இத்தகைய பல மனிதப் புதைகுழிகள் அகழப்படுகின்ற போது வெளிப்படுகின்ற ஆதாரங்கள், இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான இனவழிப்பு அல்லது இனப்படுகொலைகள் இடம்பெற்றன என்பதற்கான தெளிவான சான்றுகளை உருவாக்கி வருகின்றன, இது முழுமையாக ஒப்புக்கொள்ள வேண்டிய கல்லறை வரலாறு பற்றிய ஒரு அம்சம் என்று தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் இருவரும் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

எந்த ஒரு நிலை மாறு கால நீதிச் செயல்முறைக்கும் உண்மையைக் கண்டறிவது அடித்தளமாக இருக்க வேண்டும். அதன் மீதுதான் உண்மையான நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட முடியும்.

யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகள் தொடர்பில் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தொடர்ந்தும் பதிலைத் தேடுகின்றன. தங்கள் அன்புக்குரியவர்களின் தலைவிதி குறித்து அவர்களின் கேள்வி நியாயமானது. அந்தக் கேள்விகளுக்குப் பதில் தராத அடுத்தடுத்த ஆட்சிகளின் மௌனம் பெரும் அரசியல் தோல்வி மட்டுமல்ல, கடுமையான தார்மீகத் தோல்வியும் ஆகும். உண்மைகளை கண்டறியாமல் தேசிய நல்லிணக்கம் ஒருபோதும் சாத்தியமாகப் போவதில்லை என்று தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள்.

இலங்கையில் போர் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டவை பற்றிய விடயங்களை ஐ.நா. மனித உரிமை கவுனஸில் கூட பல தீர்மானங்கள்மூலம் தொடர்ந்து முன்வைத்து வருகின்றது.

ஆயினும், இனவழிப்பு மற்றும் இனப்படுகொலை போன்றவை தொடர்பில் குற்றம் சுமத்தப் போதிய ஆதாரங்கள் உள்ளனவா என்ற ஒரு சர்ச்சை கூறப்பட்டு வரும் நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனே இப்போது செம்மணி மனிதப் புதைக்குழி போன்றவற்றில் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்சிகளின் பெறுபேறுகள் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் குற்றங்களுக்கு அப்பால், இனப்படுகொலை அல்லது இனவழிப்பு முன்னெடுக்கப்பட்டதற்கான தெளிவான சான்றுகளை வெளிப்படுத்தி வருகின்றன என்று சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

தமிழர்களின் நீதி தேடும் போராட்டத்தில் ஒரு முக்கிய சான்றாதாரமாக - தெளிவுபடுத்தலாக - செம்மணி மாறி வருகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி செம்மணி தொடர்பாக முன் வைத்துள்ள ஐந்து கோரிக்கைகளும் மிக முக்கியமானவை.

1999 இல் தோண்டப்பட்ட செம்மணி மனிதப் புதைக்குழி விடயத்தை தற்போது 2025 இல் மேற்கொள்ளப்படும் அகழ்வோடு சேர்த்து விசாரிக்க வேண்டும், இந்த அகழ்வு மற்றும் ஆய்வுப் பணிகளை மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் சர்வதேசத்தில் மதிப்பார்ந்த சட்ட - தொழில்நுட்ப நிபுணர்களின் பங்களிப்போடும் முன்னெடுக்க வேண்டும், சர்வதேச நியமங்களுக்கு அமைவாக இந்த விடயங்கள் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்பன உட்பட தமிழரசுக் கட்சி முன்வைத்துள்ள இந்த விடயங்களை உறுதிப்படுத்தினால் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இனவழிப்புக்கான சான்றாதாரங்கள் கணிசமான அளவில் கிட்டும் என எதிர் பார்க்கலாம்.



# திராய்க்கேணி மாணவர்களுக்கு கற்றல் உதவிகள் வழங்கிவைப்பு!

( வி.ரி.சகாதேவராஜா)

ஆஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியம் ( ஒஸ்கார் ) திருக்கோவில் வலயத்திலுள்ள மிகவும் பின்தங்கிய திராய்க்கேணி வித்தியாலய மாணவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தது.

"ஒஸ்கார்" அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதனின் வழிநடத்தலில், ஆஸ்திரேலியாவில் வாழும் "ஒஸ்கார்" அமைப்பின் நிர்வாக சபை மூத்த உறுப்பினர் பொறியியலாளர் வீரக் குட்டி சத்தியமூர்த்தி இந்தத் திட்டத்துக்குப் பூரண நிதியுதவி நல்கியுள்ளார்.

இந்த நிகழ்வு , திராய்க்கேணி வித்தியாலயத்தில் இன்று (11) வெள்ளிக்கிழமை அதிபர் ஆர்.தயானந்தன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக, ஒஸ்கார் அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க ஓய்வு நிலை உதவிக் கல்விப்பணிப்பாளரும் பிரபல ஊடகவியலாளருமான வி.ரி. சகாதேவராஜா கலந்து கொண்டார்.

ஆஸ்திரேலியாவில் இருந்து வருகைதந்த ஒஸ்கார் அமைப்பின் உபதலைவர் அ.மகேந்திரன் செயலாளர் தி.லாவண்யன் பொருளாளர் வீ.விவேகானந்தமூர்த்தி ஆகியோர் சிறப்பதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

ஒஸ்கார் சார்பில் ஒருங்கிணைப்பாளராக வீ.விவேகானந்தமூர்த்தி செயற்பட்டார்.

நிகழ்வில் அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை பை உள்ளிட்ட கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அருகில் உள்ள முன்பள்ளி பாடசாலை மாணவருக்கும் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.






# கிழக்கு ஆளுநரின் பொது மக்கள் சந்திப்பு!

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால்ரட்ணசேகரவிடம் முன்வைக்கப்பட்ட பொதுமக்கள் பிரச்சினைகளுக்கான தீர்வுச் செயல்முறையை விரைவுபடுத்தும் நோக்கில், பொது மக்கள் சந்திப்பு மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் பொறுப்பான நிறுவனங்களின் தலைவர்கள் இதில் பங்கேற்றனர்.

இங்கு, பொது மக்கள் தங்கள் பிரச்சினைகளைப் பொறுப்பான அதிகாரிகளிடம் முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டது. மேலும் ஆளுநரிடமும் பிரச்சினைகளை முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.








# பஸ் நிறுத்துமிடங்களைப் பார்வையிட்டு நடவடிக்கை மேற்கொண்ட தவிசாளர்!

(றிபாஸ்)

சம்மாந்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட ஆண்டிச் சந்தி மற்றும் ஏனைய பஸ் நிறுத்தும் நிலையங்கள் முறையாகப் பராமரிக்கப்படாமல் சேதமடைந்த நிலையில் காணப்பட்டுகின்றன.

இந்த நிலையில் தவிசாளர் ஐ.எல். எம்.மாஹீர் நேரடியாக விஜயம் செய்து அவற்றைப் பார்வையிட்டுள்ளார்.

பிரதேச சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் எம்.வீ. எம்.ஜெஸீர், ஏனைய உத்தியோகத்தர்களுடன் சென்ற தவிசாளர் உடனடியாக வர்ணம் பூசி அழகுபடுத்துமாறு சம்பந்தப்பட்டோருக்குக் கட்டளை பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, தவிசாளர் தலைமையிலான குழுவினர் பிரதேச சபையூடாக செய்யப்பட வேண்டிய உட்கட்டமைப்பு, தெருவிளக்குகள் போன்ற விடயங்களிலும் கவனம் செலுத்தினர்.

# ‘மன்னெழில்’ - இதழ் 3 இற்கான ஆக்கங்கள் அனுப்புமாறு கோரல்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்ட செயலகமும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து வெளியிடும் ‘மன்னெழில்’ மலரின் மூன்றாவது இதழுக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

மன்னார் மாவட்டத்தின் வரலாறு. கடல்வளம். இயற்கை அமைவு , இலக்கியச்செழுமை, கலை பண்பாட்டுத்துறை வளர்ச்சி, உல்லாசப் பயணம், தொழில்துறைச் சிறப்பு ஆகியனவற்றை தாங்கியதாக இம்முறை ‘மன்னெழில்’ வெளிவரவுள்ளது என்று மன்னார் மாவட்ட அரச அதிபரும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையின் தலைவருமான க. கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மேற்கூறப்பட்ட விடயங்களுடன் மேலதிகமாக மலரின் சிறப்புக் கருதி ‘மன்னாரின் தொல்லியல் சான்றுகள்’, ‘மன்னாரின் சமகால இலக்கியப் படைப்புக்களும் படைப்பாளர்களும்’, ‘மன்னாருக்கே உரித்தான வாசாப்புக்களும் அவற்றின் சிறப்புக்களும்’, ‘மன்னார் மாவட்டத்தின் பெருமை பேசும் தொழில் பாடல்கள்’, ‘மன்னாரின் கூத்துக்களும் அவற்றின் வளர்ச்சிப்போக்கும்’, ‘மன்னாரின் சிற்ப. ஓவியத்துறை வளர்ச்சியும் அவற்றின்போக்கும்’, ‘மன்னாரின் நாவல் சிறுகதை வளர்ச்சி’ முதலிய ஏழு தலைப்புக்களிலும் பொருத்தமான ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆக்கங்கள் அனைத்தும் ஏ-4 தாளின் 5 பக்கங்களுக்கு மேற்படாதவாறு (பொருத்தமான விளக்கப்படங்கள் அடங்கலாக) தட்டச்சு செய்யப்பட்டு எதிர்வரும் 17.07.2025 இற்கு முன்னர் கிடைக்க கூடியவாறு attalmannar Sh gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆக்கங்களை மின்னஞ்சலில் அனுப்பி வைப்பதில் இடர்ப்பாடு இருப்பின் ‘மலராசிரியர், மன்னெழில், மாவட்ட செயலகம், மன்னார்’ என்ற முகவரிக்கு தபாலிலும் அனுப்பி வைக்க முடியும்.

ஆக்கங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்ட ‘மன்னெழில் – 1’, ‘மன்னெழில் – 2’ ஆகிய இதழ்களில் வெளிவராதவையாக இருத்தல் வேண்டும் என்றும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

நூல் வெளியீட்டுக்கென நியமிக்கப்பட்ட மலர்க்குழுவினர் கிடைக்கப்பெறும் ஆக்கங்களை மதிப்பிட்டு அவற்றில் இருந்து பொருத்தமானவற்றை இதழுக்கு தேர்வு செய்வர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மலர் தொடர்பான மேலதிக விடயங்களை அறிந்து கொள்ள தேசியக் கலைஞர் எஸ்.ஏ. உதயன் 0778960351 (மலராசிரியர்) மற்றும் இ.நித்தியானந்தன் 0775342441 (சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர் – மலர்க்குழு உறுப்பினர்) ஆகியோருடனும் தொடர்பு கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் திருவாசகம் முற்றோதல்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், பூரணை தினமான நேற்று வியாழக்கிழமை ஆச்சிரம மண்டபத்தில் காலை 5.30 மணி தொடக்கம் பக்தி பூர்வமாக திருவாசகம் முற்றோதல் இடம்பெற்றது.







# வலுவிழந்தோருக்கான தொழில்வாய்ப்பு வழங்குவது தொடர்பில் கலந்துரையாடல்

(பா.சதீசன்)

வலுவிழந்தோருக்கான தொழில் வாய்ப்புக்கள் வழங்குதல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

வலுவிழந்தோர் தொழில் வாய்ப்புகள் தொடர்பாகப் பிரித்தானியா அறம் தன்னார்வத் தொண்டு அமைப்பினருக்கும், புதியவாழ்வு நிறுவனத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

புதிய வாழ்வு நிறுவனத்தின் இணைப்பாளர் சு.விஜயலாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வலுவிழந்தோருடைய உடல், உள நலன் தொடர்பாகவும், வலுவிழந்த நபர்களுக்கு தொழில் நுட்ப ரீதியாக எவ்வாறான தொழில் வாய்ப்புக்களை வழங்க முடியும் என்பது தொடர்பாகவும், இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புத் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் புதிய வாழ்வு நிறுவனத்தின் தலைவர் சு.துஸ்யந்தன், உப தலைவர் ப.தர்சினி, உப செயலாளர் செ.கருணாகரன், இயக்குநர் சபை உறுப்பினர்கள், நிர்வாக உறுப்பினர்கள், பிரித்தானியா அறம் தன்னார்வத் தொண்டு வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் உப தலைவர் உள்ளிட்ட நிர்வாக குழுவினர், மற்றும் சமூக நலன்விரும்பிகளும் , மாற்றுத் திறனாளிகள் என பலரும் கலந்துகொண்டனர்.





# அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர்களுக்கு செயலமர்வு





(நூருல் ஹுதா உமர் )

அக்கரைப்பற்று மாநகர சபைக்குப் புதிதாகத் தெரிவாகிய உறுப்பினர்களுக்கான சபை நடவடிக்கைகள் மற்றும் கூட்ட நடவடிக்கைகள், மாநகர சபை உறுப்பினர்களுக்கான மாநகர சபை சட்டங்கள், ஒழுங்குவிதிகள், சேவைகள் தொடர்பான செயலமர்வு சர்வதேச பங்காளிகள் நிறுவனத்தின் மூலம் அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர், தேசிய காங்கிரஸ் தலைவருமான முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா ஆகியோராது வேண்டுகோளுக்கிணங்க இடம்பெற்றது.

அக்கரைப்பற்று மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற இந்த செய



லமர்வு, உறுப்பினர்களின் கடமைகளையும் பொறுப்புகளையும் மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் செயலமர்வில் வளவாளர்களாக மாற்றத்துக்குரிய சர்வதேச பங்காளிகள் நிறுவனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட ஆலோசகர்களான இப்திகார் நிஷாத் ஷரீப், எம்.ஐ.எம். வலீத் ஆகியோர் கலந்து கொண்டு விரிவான விளக்கங்களை வழங்கினர்.

இவர்களின் அனுபவம் மிக்க வழிகாட்டல் புதிய உறுப்பினர்களுக்குப் பெரிதும் உதவியது.

அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் ஏ.எல்.எம். அதாவுல்லா உட்பட சபையின் உறுப்பினர்களும் இந்தச் செயலமர்வில் கலந்து கொண்டனர். இந்த செயலமர்வு அக்கரைப்பற்று மாநகர சபையின் எதிர்கால நடவடிக்கைகளை மேலும் திறம்பட மேற்கொள்ள உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




# மயிலம்பாவெளி விக்னேஸ்வராவின் 80 ஆவது ஆண்டு நிறைவு விழா!

(அபு அலா, மட்டு.துஷாரா)

மட்டக்களப்பு கல்வி வலயத்துக்கு உட்பட்ட மயிலம்பாவெளி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபவனி அண்மையில் இடம்பெற்றது.

இந்த நடைபவனி பாடசாலை முன்றலில் இருந்து ஆரம்பமாகி, தன்னாமுனை புனித ஜோசப் கல்லூரியைச் சென்றடைந்து அங்கிருந்து ஆறுமுகத்தான் குடியிருப்பு கலைமகள் வித்தியாலயம் வரை சென்று மீண்டும் பாடசாலையை வந்தடைந்தது.



இதில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது நினைவுகூரல், அமுதவிழா கேக் வெட்டுதல், வலயக் கல்விப் பணிப்பாளர், அதிபர், முன்னாள் அதிபர் கௌரவிப்பு, க.பொ.த. சாதாரண தரம் மற்றும் க.பொ.த. உயர்தரத்தில் தேசிய மட்டப் போட்டிகளில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிப்பு என்பன இடம்பெற்றன.






# ‘கிளீன் ஸ்ரீலங்கா’ திட்டத்தில் கல்முனையில் பீச் துப்புரவு!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

அரசின் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத் திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட கடற்கரை பிரதேசங்கள் புதன்கிழமை (09) சுத்தம் செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவின் ஆலோசனையின் பேரில் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஸட்.ஏ.எம். பைசாலின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தலைமையில் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம், சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் ஏ.எம். டிலிப் நௌஷாத் ஆகியோரின் நெறிப்படுத்தலில் மாநகர சபையின் சுகாதார மற்றும் வேலைகள் பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்கள் கூட்டாக இப்பணிகளில் ஈடுபட்டனர்.

இதன் கீழ் சாய்ந்தமருது, கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை, பெரிய நீலாவணை ஆகிய பிரதேசங்களில் பொது மக்கள் ஒன்றுகூடுகின்ற பிரசித்தமான பொழுதுபோக்கு இடங்களும் குப்பைகள் கூடுதலாக தேங்கிக் கிடந்த பகுதிகளும் விஷேடமாக சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் களப்பணியில் ஈடுபட்ட அனைத்து ஊழியர்களுக்கும் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி நன்றி தெரிவித்துள்ளார்.

சிரமங்களுக்கு மத்தியில் சுத்திகரிப்பு செய்யப்படும் கடற்கரை, கடற்கரைப் பூங்கா, சிறுவர் பூங்கா போன்ற பொது இடங்களில் குப்பைகள் போடுவதை தவிர்ந்துக் கொள்ளுமாறும் இவ்வாறான இடங்களை அழகாக பேணிப் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் பொது மக்களைக் கேட்டுள்ளார்.








# மன்னாரில் இன்று ஆரம்பமானது விடத்தல் தீவு பன்னாட்டு மாநாடு!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கிராமத்தின் பன்னாட்டு மாநாடு இன்று வெள்ளிக்கிழமை (11) காலை 8.30 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் ஆரம்பமானது.

இந்த மாநாடு விடத்தல் தீவு கிராமத்தைச் சேர்ந்த துறைசார் வல்லுனர்கள், கல்விமான்கள் மற்றும் சமூக முன்னேற்றத்துக்காகப் பணியாற்றும் நபர்கள் ஒன்று சேரும் ஒரு அரிய சந்திப்பாக ஆரம்பமானது. இந்த நிகழ்வு 2 ஆவது நாளாக நாளை (12) சனிக்கிழமையும் இடம்பெற உள்ளது.

இந்த மாநாடு பொருளாதாரம், கல்வி, சுற்றுச்சூழல், சமயம், கலாச்சாரம், பண்பாடு மற்றும் விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் நடைபெறும் நிகழ்வுகளை ஆய்வு செய்து ஆவணப்படுத்துவதோடு இவ்விடயங்களில் பரஸ்பர புரிதலை ஏற்படுத்தி மக்களின் வாழ்வியலை மேம்படுத்தும் ஒரு முக்கிய அமர்வாக இடம்பெற்று வருகின்றது.

மன்னாரில் அமைந்துள்ள விடத்தல் தீவு கிராமத்தின் சிறப்பும், பண்பாடும் மற்றும் கலை கலாசார பாரம்பரியமும் இந்த மாநாட்டின் 2 ஆம் நாள் நிகழ்வில் இடம்பெறவுள்ளன.

போரின் அனர்த்தங்களால் உருக்குலைந்து போன விடத்தல் தீவு போன்ற கிராமங்களின் பொருளாதார, சமூக கலாசார அம்சங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கும் ஆவணப்படுத்துவதற்குமாக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய நிகழ்வில் விருந்தினர்கள் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இருந்து மாலை அணிவிக்கப் பட்டு வாத்திய இசையுடன் நகரசபை மண்டபம் நோக்கி அழைத்து வரப்பட்டனர்.

விருந்தினர்களாக வவுனியா பல்கலைக்கழக உப வேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் அருளம்பலம் அற்புதராஜா, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.








# விஷேட நுளம்பு ஒழிப்பு வேலைத் திட்டம்!

(எம்.ஏ.றமீஸ்)

அரசு நடைமுறைப்படுத்தியுள்ள நாடு தழுவிய தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தின் ஒரு அங்கமாக நாடு முழுவதிலும் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டுதினம்பிரகடனப்படுத்தப்பட்டு பல்வேறு நுளம்பு ஒழிப்பு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைவாக, அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட நுளம்பு ஒழிப்பு விஷேட வேலைத் திட்டம் அதிபர் ஏ.எல்.நசீபா தலைமையில் இடம்பெற்றது.




இதன்போது பிரதி அதிபர்களான எம்.ஏ.சலாகுதீன், என்.எம்.சாலிஹ் உதவி அதிபர்களான எஸ்.ரி.சம்சுதீன், ஏ.எல்.மஹ்றூப் உள்ளிட்ட வலயத் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்த வேலைத் திட்டத்தில் பாடசாலையின் சுற்று வட்டாரத்தில் உள்ள வடிகான்கள், கால்வாய்கள், நீரேந்து பகுதிகள் போன்றன சுத்தப்படுத்தப்பட்டு நுளம்புகள் உண்டாகும் சூழல் சுத்தம் செய்யப்பட்டன.

இதேவேளை, பாடசாலையை அண்டிய பிரதேசத்தில் பற்றைக் காடுகளாய் சுற்றாடலுக்குக் கேடு விளைவிக்கத்தக்க வகையில் வளர்ந்து காணப்பட்ட மரம், செடி, கொடிகள், புல், பூண்டுகள் போன்றன அழித் தொழிக்கப்பட்டன.

இதுதவிர 'கிளீன் ஸ்ரீலங்கா விஷேட வேலைத்திட்டத்தின் கீழ் நுளம்புகளின் தாக்கம் பற்றியும் அதன் கேடுகள் தொடர்பிலும் விஷேட ஆலோசனைகள் மற்றும் விஷேட விழிப்புணர்வு ஊர்வலம் என்பன இதன்போது மேற்கொள் எப்பட்டன.

# அரசியல் கூட்டணி அமைப்பது தொடர்பான விஜய் நிலைப்பாட்டில் மாற்றம் வர வாய்ப்பு

## முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி தெரிவிப்பு



தேர்தலுக்கு 8 மாதங்கள் உள்ளதால், இன்னும் பல கட்சிகள் அ.தி.மு.க. கூட்டணியில் இணைய வாய்ப்புள்ளது என்றும் விஜய் நிலைப்பாட்டில் மாற்றம் வர வாய்ப்புள்ளது எனவும் முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி தெரிவித்துள்ளார்.

சிவகாசியில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியின் 'தமிழகத்தை மீட்போம் மக்களை காப்போம்' பேரணி ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நேற்று இரவு நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் கே.டி ராஜேந்திர பாலாஜி செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

"ஆட்சிக்கு வந்து 50 மாதங்களை கடந்த பின், தேர்தல் வருவதால் ஓரணியில் தமிழ்நாடு எனக்கூறி மக்களை குழப்ப பார்க்கின்றனர். தமிழ்நாடு மக்கள் வருமானம் இன்று தவித்து வரும் நிலையில் ஸ்டாலின் குடும்பம் தான் ஓரணியில் சுபிட்சமாக உள்ளது.

தெற்கு, வடக்கு எனப் பேசுவது, மொழிப் பிரச்சினையை தூண்டி விடுவது என்பது தேர்தல் வரும்போது கருணாநிதி காலம் தொட்டு தி.மு.க. கடைபிடிக்கும் உத்தி. தமிழக மக்கள் விழிப்புடன் இருப்பதாலும், எங்கள் கூட்டணி உறுதியாக உள்ளதாலும் 2026 தேர்தலில் அதிமுக வெற்றி பெற்று ஆட்சி அமைப்பது உறுதி.

தமிழ் ஈழத்தை ஆதரிக்கும் திருமாவளவன், இலங்கைத் தமிழர் படுகொலைக்கு காரணமாக இருந்த காங்கிரஸ், தி.மு.க. கூட்டணியில் தொடர்வது தான் ஒவ்வாத கூட்டணி. தி.மு.க. கூட்டணியில் பிரச்சினை இருந்தால், திருமாவளவன் அ.தி.மு.க. கூட்டணிக்கு வந்தால் அவரை வரவேற்கத் தயாராக உள்ளோம்.

மாணிக்கம்தாகூர் வெற்றி பெற்றாரா அல்லது வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டாரா என்பது ஆண்டவனுக்கும், ஆட்சியருக்கும் மட்டும்தான் தெரியும். இது குறித்த வழக்கு நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சி இந்தியாவுக்கு அப்பாற்பட்ட கட்சி. தேசியத்தையும், தெய்வீகத்தையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி.

பட்டாசு தொழிலை பயங்கரவாத தொழிலாக பார்க்கும் நிலை இந்த ஆட்சியில் உள்ளது. பசுமை தீர்ப்பாய உத்தரவின்படி விபத்து உரித்து ஆய்வு செய்து பிரச்சினைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, தொழிலை நசுக்குகின்ற வேலையை செய்தால் அதிமுக நிச்சயம் எதிர்க்கும்.

'தமிழகத்தை மீட்போம் மக்களை காப்போம்' யாத்திரையில் விருதுநகர் மாவட்டத்தில் ஒகஸ்ட் 4,5,6 மூன்று நாள்கள் சுற்றுப்பயணம் செய்யும் எடப்பாடி பழனிச்சாமி, பட்டாசு தொழிலாளர்கள், விசைத்தறி தொழிலாளர்களை நேரில் சந்தித்து குறைகளை கேட்க உள்ளார்.

தேர்தலுக்கு 8 மாதங்கள் உள்ளதால், இன்னும் பல கட்சிகள் அதிமுக கூட்டணியில் இணைய வாய்ப்புள்ளது. விஜய் நிலைப்பாட்டில் மாற்றம் வர வாய்ப்புள்ளது." - என்றார்.

# குடும்பத்துக்காக ஸ்டாலின் ஆட்சியை நடத்துகின்றார்

## பழனிசாமி குற்றச்சாட்டு



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது குடும்பத்துக்காக ஆட்சி நடத்துகிறார் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

'மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்' பயணத்தின் ஒரு பகுதியாக விழுப்புரத்தில் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்ட பழனிசாமி, பொதுமக்களிடையே உரையாற்றுகையில்,

"பெஞ்சல் புயலை தமிழக அரசு முறையாக எதிர்கொள்ளாததால் விழுப்புரம் நகரமே தண்ணீரில் மிதந்தது.

அ.தி.மு.க. ஆட்சியில் 2 முறை கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகளின் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. விழுப்புரத்தில் தொடங்கப்பட்ட ஜெயலலிதா பல்கலைக்கழகத்தை திமுக ஆட்சி ரத்து செய்துவிட்டது. 1,503 கோடி இந்திய ரூபாயில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தையும் தி.மு.க. ஆட்சி ரத்து செய்துவிட்டது.

அறநிலையத்துறை மூலம் 9 கல்லூரிகள் தொடங்கப்படும் என்கின்றனர். கல்லூரிகள் அவசியம்தான். ஆனால், எதிர்காலத்தில் அவற்றின் வளர்ச்சிக்கு நிதி கிடைக்காது. எனவேதான், அறநிலைத் துறை மூலம் கல்லூரிகளைத் தொடங்காமல், அரசு சார்பில் தொடங்குமாறு வலியுறுத்துகிறோம்.

சிறுபான்மை மக்களுக்கு தி.மு.க. ஆட்சியில் பாதுகாப்பு இல்லை. மதுரை மாநகராட்சியில் 200 கோடி இந்திய ரூபா ஊழல் நடந்துள்ளது. அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தனது குடும்பத்துக்காக ஆட்சி நடத்துகிறார் ஸ்டாலின். 2026 இல் அ.தி.மு.க. மக்களாட்சியை நடத்தும்." என்றார்.

# அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்த பேச்சுவார்த்தையை இஸ்ரேல் நாசப்படுத்தியது

## ஈரானிய வெளியுறவு அமைச்சர் குற்றச்சாட்டு

ஈரானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான வெற்றிகரமான பேச்சு வார்த்தைத் தொடரை இஸ்ரேல் நாசப் படுத்தியதாக ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராச்சி குற்றம் சாட்டியதாக நியூஸ் வீக் செய்தி வெளி யிட்டுள்ளது

டொனால்ட் ட்ரம்பின் சிறப்பு பிரதி நிதி ஸ்டீவ் விட்காஃப்புடன் ஒன்பது வார காலப்பகுதியில் 5 பேச்சுவார்த்தைகளை நடத்தியதாகவும், முக்கியமான 6 ஆவது சந்திப்புக்கு 48 மணி நேரத்திற்கு முன்பு இஸ்ரேல் ஈரானை தாக்கியபோது பேச்சுவார்த்தைகள் முறிந்ததாகவும் வெளியுறவு அமைச்சர் கூறியதாக நியூஸ் வீக் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜோபைடன்நிர்வாகத்தின்கீழ் நான்கு ஆண்டு பேச்சுவார்த்தைகளை விட அமெரிக்க பிரதிநிதியுடனான பேச்சு வார்த்தைகள் அதிக முன்னேற்றம்



அடைந்ததாகவும் அப்பாஸ் அராச்சி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் தமது அணுசக்தி நிலையங் கள், வீடுகள், மருத்துவமனைகள், முக்கிய எரிசக்தி உள்கட்டமைப்பு மற்றும் சிறைச்சாலைகளில் கூட குண்டுவீசி இராஜதந்திரத்தை காட்டிக் கொடுத்ததாக குற்றம் சாட்டிய ஈரானிய வெளியுறவு அமைச்சர், தீர்வுகளை விட மோதல்களை விரும்பும் ஒரு நாடு இஸ்ரேல் என்றும் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் நட்பு நாடாக நடிக் கும் ஒரு அரசால் ஈரான்-அமெரிக்க பேச்சுவார்த்தைகளின் வெற்றி நாசமாக் கப்பட்டது. ஐ.நா. மேற்பார்வையின் கீழ் அமைதியான அணுசக்தி திட்டத்திற்கு ஈரான் எப்போதும் உறுதிபூண்டுள்ளது. "முழு அளவிலான பிராந்தியப் போரைத் தடுக்க நாங்கள் பொறுப்புடன் செயல்படவும் உறுதிபூண்டுள்ளோம். அதை பலவீனமாக தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது.

எதிர்காலத்தில் ஈரானுக்கு எதிரான எந்தவொரு தாக்குதலையும் தோற்கடிக்க நாங்கள் தயங்க மாட்டோம். மேலும் இதுபோன்ற மோதல் மீண்டும் ஏற்பட் டால், ஈரான் எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதை நாங்கள் அறிவோம்" என்று ஈரானிய வெளியுறவு அமைச்சர் நியூஸ் வீக் செய்தித்தாளில் கூறியதாக மேற் கோள் காட்டப்பட்டுள்ளது.

# ஊட்டச்சத்து மருந்துக்கு வரிசையில் நின்ற சிறுவர்கள் இஸ்ரேலியத் தாக்குதலில் பலி



மத்திய காசாவில் உள்ள மருத்துவ மனை ஒன்றுக்கு முன்பாக, ஊட்டச்சத்து மருந்துகளுக்காக வரிசையில் நின்ற வர்கள்மீது நடத்தப்பட்ட, இஸ்ரேலிய படையினரின் தாக்குதலில் 8 சிறுவர் கள் உட்பட்ட 15 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

டெய்ர் அல்-பலாவில் உள்ள அல்-அக்ஸா தியாகிகள் மருத்துவமனை பகுதியிலேயே இந்த சம்பவம் பதிவாகி யுள்ளது.

இந்தநிலையில், இஸ்ரேலியர்களின் இந்த தாக்குதல், சர்வதேச சட்டத்தின் அப்பட்டமான மீறல் என்று அமெரிக்கா வைத் தளமாகக் கொண்ட உதவிக் குழுவான ப்ராஜெக்ட் ஹோப் குற்றம் சுமத்தியுள்ளது.

# அமெரிக்க வரிகளையும் எதிர்கொள்ள தயாராக இருப்பதாக பிரேசில் அறிவிப்பு

அமெரிக்கா மீது விதிக்கும் எந்த வொரு வரிகளையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக பிரேசில் ஜனாதி பதி லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா தெரிவித்துள்ளார்.

முன்னதாக, உலக நாடுகளுக்கு வரி விதிப்பு மூலம் ட்ரம்ப் அச்சுறுத் திய நிலையில், தற்போது பிரேசிலை குறிவைத்துள்ளார். ஓகஸ்ட் 1 முதல் வரி விதிக்கப்படும் என்று ட்ரம்ப் அனுப்பிய கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

ட்ரம்பின் மிரட்டலுக்கு லூலா பதில ளித்தபோது,

"பிரேசில் ஒரு இறையாண்மை கொண்ட நாடு. அச்சுறுத்தல்களுக்கு அஞ்ச மாட்டோம். ஆட்சி கவிழ்ப்பைத் திட்டமிட்டவர்களுக்கு எதிரான நடவடிக் கைகள் பிரேசிலின் சட்ட வரம்புக்குள் மட்டுமே வரும்.

உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங் கள் பிரேசில் சட்டங்களுக்குக் கட்டுப்பட வேண்டும். கடந்த 15 ஆண்டுகளில் அமெரிக்காவுடன் 410 பில்லியன் டொலர் வர்த்தகம் செய்துள்ளோம். இந்த வரி விதிப்பை பிரேசிலின் பொருளா தார சட்டங்களின்படி எதிர்கொள்வோம்."



என்று தனது 'எக்ஸ்' தளத்தில் உறுதி யாகப் பதிலளித்துள்ளார்.

கனடா முரசு

வெள்ளிக்கிழமை | 11/07/2025

**கனடாவின் பொருள்களுக்கு 35 வீத வரி விதித்தார் ட்ரம்ப்**



C2



# கனடாவில் நேருக்கு நேர் மோதிய இரு விமானங்கள்; இருவர் பலி

கனடாவில் விமானப் பயிற்சியின்போது, இரு விமானங்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மனிடோபா, ஸ்டெயின்பாக் பகுதியில், விமானம் ஓட்டும் பயிற்சி மையம் ஒன்றில், மேற்படிஇருவரும்தனித்தனியாகவிமானத்தை இயக்கும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, வின்னிபெக்கில் இருந்து 60 கிலோமீற்றர் தூரத்தில், தெற்கு விமான நிலையம் அருகே இருவரும் விமானத்தைத் தரையிறக்க முயன்றவேளை, 400 மீற்றர் உயரத்தில் இருவரின் விமானங்களும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்துக்குள்ளான விமானங்கள் தீப்பிடித்ததில், சம்பவ இடத்திலேயே இருவரும் உயிரிழந்துள்ளனர்.

மேற்படி, சம்பவம் தொடர்பில், கனடா போக்குவரத்து பாதுகாப்புச் சபை விசாரணைகளை நடத்தி வருவதாக, வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கனடாவில் இந்திய நடிகரின் உணவகம் மீது துப்பாக்கிசூடு

கனடாவில், இந்திய நகைச்சுவை நடிகரின் உணவகம் மீது துப்பாக்கிசூடு நடத்தப்பட்டமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த கபில் சர்மா, நகைச்சுவை நடிகர், தொலைக்காட்சி தொகுப்பாளர், டப்பிங் கலைஞர், தயாரிப்பாளர் மற்றும் பாடகர் ஆவார். இவர் ஸ்டாண்ட்–அப் காமெடி நிகழ்ச்சிகள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளான தி கபில் ஷர்மா ஷோ மற்றும் காமெடி நைட்ஸ் வித் கபில் ஆகியவற்றின் மூலம் பிரபலமானவர்.

இவர், கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள சர்ரே என்னுமிடத்தில் சமீபத்தில் புதிதாக கப்ஸ் கேப் என்ற




உணவகத்தை திறந்துள்ளார்.

இந்த உணவகத்தின் மீது 09 ஆம் திகதி இரவு காரிலிருந்த மர்ம நபர் துப்பாக்கியால் 9 முறை சுட்டுவிட்டு தப்பிவிட்டார்.எனினும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்த சம்பவத்துக்கு இந்தியாவால் தேடப்பட்டு வரும் காலிஸ்தானி பயங்கரவாதி ஹர்ஜீத் சிங் லட்டி பொறுப்பேற்றுள்ளார். இது பற்றி கனடா பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.



# கனடாவின் பொருள்களுக்கு 35 வீத வரி விதித்தார் ட்ரம்ப்

எதிர்வரும் ஒகஸ்ட் 1 முதல் கனேடிய பொருள்களுக்கு 35 வீதம் வரி விதிக்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான வர்த்தக பங்காளிகள் மீது 15 வீதம் அல்லது 20 வீதம் மொத்த வரிகளை விதிக்கப்போவதாக ட்ரம்ப் அச்சுறுத்தியதோடு, ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அதன் பொருட்களுக்கான புதிய வரி விகிதத்தை விரைவில் அறிவிப்பதாகவும் கூறியிருந்தார்.

இந்த நிலையில், புதிய வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவதற்கு இரு நாடுகளும் சுயமாக விதித்துக் கொண்ட காலக் கெடுவிற்கு இன்னும் சில நாள்களே உள்ள நிலையில் மேற்கண்ட அறிவிப்பு வந்துள்ளது.

கனடா மீதான அண்மைய வரிகளை ட்ரம்ப் வியாழக்கிழமை (10) சமூக ஊடகங்களில் வெளியிட்டார்.

அதில், கனடாவுக்கான புதிய வரிகள் ஒகஸ்ட் 1 முதல் அமுலுக்கு வரும் என்றும் கனடா பதிலடி கொடுத்தால் அது அதிகரிக்கும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி எச்சரித்தார்.

அமெரிக்கா ஏற்கனவே சில கனேடிய பொருள்களுக்கு 25 வீதம் முழுமையான வரியை விதித்துள்ளது.

இந்த நிலையில் 35 வீத வரி என்பது வொஷிங்டனுடன் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்த முயன்ற கனேடிய பிரதமர் மார்க் கார்னிக்கு ஒரு அடியாகும்.

இந்த வாரம் ஜப்பான், தென் கொரியா மற்றும் இலங்கை உள்ளிட்ட அமெரிக்க வர்த்தக பங்காளிகளுக்கு ட்ரம்ப் அனுப்பிய 20க்கும் மேற்பட்ட கடிதங்களில் இந்தக் கடிதமும் ஒன்றாகும்.



கனடாவின் கடிதத்தைப் போலவே, ஒகஸ்ட் 1 ஆம் திகதிக்குள் வர்த்தக பங்காளிகள் மீது அந்த வரிகளை அமுல்படுத்துவதாக ட்ரம்ப் உறுதியளித்துள்ளார்.

அண்மைய வரி அச்சுறுத்தல் கனடா-அமெரிக்கா-மெக்ஸிகோ ஒப்பந்தத்தின் கீழ் வரும் பொருள்களுக்குப் பொருந்துமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

ட்ரம்ப் அலுமினியம் மற்றும் எஃகு இறக்குமதிகளுக்கு உலகளாவிய 50மூ வரியையும், அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படாத அனைத்து கார்கள் மற்றும் லொரிகளுக்கும் 25 வீதம் வரியையும் விதித்துள்ளார்.

செப்பு இறக்குமதிகளுக்கு 50 வீத வரியையும் அண்மையில் அவர் அறிவித்தார், இது அடுத்த மாதம் நடைமுறைக்கு வர திட்டமிடப்பட்டுள்ளது.

கனடா அதன் பொருள்களில் நான்கில் மூன்று பங்கினை அமெரிக்காவிற்கு விற்கிறது.

மேலும் இது ஒரு வாகன உற்பத்தி மையமாகவும், உலோகங்களின் முக்கிய விநியோகஸ்தராகவும் உள்ளது.

மெக்ஸிகோவிற்கு அடுத்தபடியாக அமெரிக்காவின் இரண்டாவது பெரிய வர்த்தக பங்காளியாகவும், அமெரிக்க ஏற்றுமதிகளை அதிகம் வாங்குபவராகவும் கனடா உள்ளது.

அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியக தரவுகளின்படி, கடந்த ஆண்டு இது 349.4 பில்லியன் டொலர் அமெரிக்க பொருட்களை இறக்குமதியும், 412.7 பில்லியன் டொலர் பொருள்களை அமெரிக்காவிற்கு ஏற்றுமதியும் செய்துள்ளது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் அமெரிக்காவுடனான வர்த்தக சவால்களைச் சமாளிப்பதற்கான உறுதிமொழியுடன் தனது லிபரல் கட்சியை மீண்டும் தேர்தல் வெற்றிக்கு அழைத்துச் சென்ற கார்னி, ஜூலை 21 ஆம் திகதிக்குள் அதன் முக்கிய வர்த்தக பங்காளியுடன் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தை பேச்சுவார்த்தை நடத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.


THE WHITE HOUSE
WASHINGTON

July 10, 2025

The Right Honorable
Mark Carney, PC, MP
Prime Minister of Canada
Ottawa

Dear Mr. Prime Minister:

It is a Great Honor for me to send you this letter in that it demonstrates the strength and commitment of our Trading Relationship, and the fact that the United States of America agreed to continue working with Canada, despite Canada having financially retaliated ag United States. As you will recall, the United States imposed Tariffs on Canada to deal wi Nation's Fentanyl crisis, which is caused, in part, by Canada's failure to stop the drugs fr pouring into our Country. Instead of working with the United States, Canada retaliated w own Tariffs. Starting August 1, 2025, we will charge Canada a Tariff of 35% on Canadia products sent into the United States, separate from all Sectoral Tariffs. Goods transshipp evade this higher Tariff will be subject to that higher Tariff. As you are aware, there will Tariff if Canada, or companies within your Country, decide to build or manufacture prod within the United States and, in fact, we will do everything possible to get approvals quic professionally, and routinely — In other words, in a matter of weeks.

If for any reason you decide to raise your Tariffs, then, whatever the number you choose them by, will be added onto the 35% that we charge.

Also, I must mention that the flow of Fentanyl is hardly the only challenge we have with which has many Tariff, and Non-Tariff, Policies and Trade Barriers, which cause unsust Trade Deficits against the United States. Canada charges extraordinary Tariffs to our Da Farmers — up to 400% — and that is even assuming our Dairy Farmers even have acces their products to the people of Canada. The Trade Deficit is a major threat to our Econor indeed, our National Security!

# கவனம் ஈர்த்துள்ள ட்ரம்ப் எழுதிய கடிதம்

ட்ரம்ப் மீண்டும் கனேடிய பொருள்கள் மீது 35 சதவிகித வரிகள் விதிக்க இருப்பதாக அறிவித்துள்ளார்.

வரி விதிப்பு தொடர்பில் கனேடிய பிரதமரான மார்க் கார்னிக்கு ட்ரம்ப் எழுதியுள்ள விடயம் கவனம் ஈர்த்துள்ளது.

அன்புள்ள பிரதமர் அவர்களுக்கு, எனத் துவங்கும் அந்தக் கடிதத்தில், உங்கள் நாட்டிலிருந்து எங்கள் நாட்டுக்குள் நுழையும் போதைப்பொருட்களை தடுக்க கனடா தவறிவிட்டது.

அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்றுவதற்கு பதிலாக, பழிவாங்கும் வகையில் வரி விதித்துள்ளது கனடா.

ஆக, ஆகத்து மாதம் 1ஆம் திகதி முதல், அமெரிக்காவுக்குள் இறக்குமதி செய்யப்படும் கனேடிய பொருள்களுக்கு 35 சதவிகித வரி விதிக்க இருக்கிறோம்.

நீங்கள் மீண்டும் வரியை அதிகரித்தால், இந்த 35 சதவிகித வரியுடன், நீங்கள் எவ்வளவு வரி விதிப்பீர்களோ அதே வரியை நாங்களும் கூடுதலாக விதிப்போம் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆக, அன்புள்ள பிரதமர் அவர்களுக்கு எனத் துவங்கி, வரி விதிப்பு குறித்து மறைமுகமாக மிரட்டல் விடுத்துள்ளது ட்ரம்பின் கடிதம்.

ஆகத்து மாதம் 1ஆம் திகதி முதல், கனேடிய பொருள்கள் மீது 35 சதவிகித வரிகள் கூடுதலாக விதிக்கப்பட உள்ளன என்பதுதான் கடிதத்தின் சாராம்சம்.

# போலி குடிவரவு சேவை வழங்கிய பெண் கைது

கனடாவில் குடியுரிமை மற்றும் வேலை அனுமதிக்காக விண்ணப்பிக்க விரும்பிய பலரிடம் பொய்யான குடிவரவு சேவைகளை வழங்கிய குற்றச்சாட்டில் 43 வயதான பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2023 மே 31 முதல் 2025 மே 31 வரையான காலப்பகுதியில் யோங் வீதி மற்றும் எக்லிங்டன் அவென்யூ பகுதிகளில் குற்றவாளி குடிவரவு ஆலோசனைகள் வழங்கியதாக கூறப்படுகிறது.

மக்கள் மேற்படி பெண்ணிடம் பணம் செலுத்திய பின், அரசாங்க ஆவணங்கள் போல உருவாக்கப்பட்ட பொய்யான ஆவணங்கள் வழங்கப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.



இந்த ஆவணங்கள் திகதிகள் தவறானவையாக இருப்பதும், வழங்கப்பட்ட சேவைகள் சட்டபூர்வமானவை அல்ல என்பதும் பாதிக்கப்பட்டவர்களால் உணரப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாரியா கொர்புஸ் என்ற 43 பெண் மீது போலி ஆவணத் தயாரிப்பு உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த பெண் தொடர்பில் மேலும் தகவல்கள் இருந்தால், டொராண்டோ பொலிஸாருக்கு தெரிவிக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.